# நடுத்தீர்வையுலா


பிரசுரகர்த்தர்கள் :

**M. தம்புசாமி பிள்ளை அண்டு சன்ஸ்**

வேத சாமான்கள் வியாபாரம்

தபால் பெட்டி நெ. 10

விழுப்புரம்



சேசு மரி சூசை துணை.

# நடுத்தீர்வையுலா

## காப்பு

### நேரிசை வெண்பா

பூமியிலே நாதன் பொதுத்தீர்வை கேட்குநாள்
தோமிலாச் சீஷருக்குச் சொன்னகுறி—நேமமுடன்
புத்திதரு மெஞ்ஞானப் போதவுலா வாயியம்பக்
கத்தனிரு பூஞ்சரணை காப்பு.

## உலா

ஆதி பராபரன்றன் அன்புவீயெல்லா நெருப்பால்
நீதி யுடனெரித்து நீராக்கி—வேதனையால், 1

செத்த சனத்தையெல்லாஞ் சீக்கிரத்தி லேயெழுப்பி
மத்தியச மாய்ஞான வழிகேட்ட—புத்தியில்லாப், 2

பாவிகட்குத் தீநரகப் பங்கு கொடுத்துமிகச்
சாவித்துப் பேயாலே தான்வருந்தக்—கோபித்துத், 3

தள்ளிவிட்டு நல்லோர்க்குத் தாமோக்ஷ மேகொடுக்க
வள்ளலெனுங் கர்த்தர் வரும்வகைபா—விள்ளினன், 4

செந்திருநெல் வேலிதனில் சீரார்க்கித் தேரிமுத்து
தந்த கனகப்ப னென்பான்—றன், 5

எந்தை மறைமுடிவே எம்கோவே யென்னாவில்
வந்திருந்து சீர்சிறந்து வாக்களிப்பாய்—சந்தமரி, 6

தாயே தமிழ்மணக்குந் தண்காவே நூற்கடலே
நீயே உதவிசெய்வாய் நேராக—ஓயாமல், 7

தற்பரனே வற்செய்யுஞ் சம்மனசே யெந்நாளுந்
துற்பரவாய் இந்நூற்குத் துணைவருவாய்—சிற்பரமாங், 8

கார்கொண்ட வான்றந்தை காய்ச்சினத்தை மாதயவாய்
சீர்கொண்ட தேவசுதன் தீர்த்திடவே—பார்கொண்ட, 9

பாவிகட்காய் மானிடர்போல் பாடுபட்டு மூன்றாநாள்
ஓவியம தாக உயிர்த்தெழுந்து—பூவுலகில், 10

நாற்பது நாளிருந்து ஞான வழிகாட்டித்
தோற்பிலா சீஷருக்குச் சொல்லுகின்றார்—எற்குரிய, 11

பொன்னுலகில் போனதும்யாம் பூவுலகோர் கட்கினிமேல்
மன்னுநடுத் தீர்க்க வருவோமென்று—சொன்னவுடன், 12

எத்தனை நாளிருக்கு தென்று சீஷர்கேட்க
அத்த னுரைத்தவகை யானதுகேள்—நித்தம், 13

நடக்குங் குறிநாளை நான்சொல்வே னென்று
அடக்கமறச் சொன்னார் அதையுணர்ந்து—முடக்கமில்லா, 14

ஞானக் கலையுணர்ந்தோர் நன்கெழுதி வைத்தபடி
ஈன வறிவுடையே னியற்றுகிறேன்—ஊனமுடன், 15

பஞ்சம் வருங்கதிக்கும் பாவமதினாற் பகையாம்
வஞ்சப் பெருங்காற்றாம் வையகத்தில்—சஞ்சலஞ்சேர், 16

நீரகம் போலச் செகத்தோர்க்குத் தானுடம்பில்
மாநெருப்பே தங்கி வயிறுவிடத் தீவிளைவால், 17

மாழ்வார் சிலபேர்கள் மாறாமலே பலநாள்
தாழ்வா ருயர்வார்கள் தாரணியில்—பாழாக, 18

சண்டை படைபாலே சாவா ருடலதனை
விண்டோடுஞ் செந்நீர் மிகப்பெருகி—மண்டலத்தில், 19

நாடு விளையாது நற்காலம் போயொளிக்கும்
கேடு தொடுத்துலகங் கெட்டுவரும்—நீடும், 20

வளமாரி பெய்யாமல் வானஞ் சுருங்குங்
களையாற் பயிர்கள் கசங்கும்—பிழையாக, 21

வெள்ளத்தாற் பஞ்சமதாம் வெஞ்சாவி யாகிவிடும்
பள்ளப் பனை நிலங்கள் பாழாகும்—விள்ளரிய, 23

நோய்விழுகுமே பயிரில் நோய்பூச்சி வெட்டிவிடும்
வேய்மருவி யக்கினியை விட்டெரிக்குங்—காய்கனியை, 23

பட்டணங்க டோறும் பசிநோய் மிகுந்துவரும்
வட்டியனி யாயமதாய் வாங்கிடுவார்—துட்டர்கடம், 24

பிள்ளையுடன் கொண்டபெண்டை பிசகாக விற்றிடுவார்
தெள்ளெழிலார் கன்னிச் சிறைவிற்பார்—கள்ளமுறும், 25

சூதுவினை யுங்கபடுஞ் சொல்களவும் பொய்பெருகும்
மாதரின்மேல் மோகமுற்று வாடுவார்—நீதிமுள்ள, 26

ஞானமது தப்பிவெறி நாய்போற் சினந்திடுவார்
ஊனைக் கொலைபுரிவார் ஓயாமல்—ஈனத், 27

திருட்டும் பெருகிவருஞ் சீமையெல்லாம் பாவப்
பிரட்டு முரட்டாகப் பேசி—மருட்டியே, 28

எந்தன் கடன் பணத்தை யிப்போதா வென்றுசொல்லிச்
சிந்தை கலங்கப்பொய் செப்பியே நந்தலுறும், 29

பொய்யாணை யிட்டிடுவோர் பொய்சத்தி யம்பெருகும்
மெய்யோனைத் தேடாமல் விட்டிடுவோர்—வையகத்தில், 30

காசினியை யாளரசர் நைக்கூலி யைப்[illegible]ற்றிப்
பேசிடுவோர் ஞாயம் பிழையாக—ஆசையுள்ள, 31

அண்ணனுக்குத் தம்பிபகை அன்னையர்க்குப் பிள்ளைபகை
கண்ணிற் சிறந்த பெண்டீர் காய்ந்திடவே—நன்புருடர், 32

நான்றுகொள்வார் நஞ்சு தின்பார் நாக்கைப் பிடுங்கிக்கொள்வார்
ஈனமுடன் சாவார்கள் இன்பமின்றி—ஊனமுடன், 33

ஆற்றில் மடிவாரும் அக்கினியில் வீழ்வாரும்
தாற்றினால் குத்துண்டு சாவாரும்—தோற்றாமல், 34

பூலோக மெல்லாம் புறைப்பிணியு முண்டாகும்
ஆல விஷக்காற்றில் ஆர்ந்திருப்போர்—மேலாக, 35

வெய்யோன் மிகவெலுப்ப வெவ்வரவுஞ் செங்தேளுஞ்
செய்யான் முதலான செந்துகளால்—வைவார்கள், 36

நாளுக்கு நாளாய் நடக்கும் வழிகுருகுங்
கோளுங் கதிமாறி கோணிவிடும்—நீள்கடல்சூழ், 37

ஆளும் அரசர் அரசியற்கைத் தானிழப்பார்
நாளுமே பூமி நடுக்கமுண்டாங்—தானுற்று, 38

மேல்புறத்து புன்செய் விளையு மதற்கடுத்த
கீழ்புறத்து நன்செய் பலன் கெட்டுவிடும்—மேலாம், 39

அறிவு மயக்கமதால் அண்ணனுடன் தங்கை
முறைமை யில்லாமல் மோகிப்பாள்—தாரைதனிலே, 40

தாயு மகனுஞ் சரசமிக வேபேசி
ஞாயமது பாராமல் நத்தியே—நேயமுடன், 41

சிற்றின்பத் தீதனைச் செய்திடுவார் கூசாமல்
அத்தனைத் தேடார்க ளம்புவியில்—நித்தநித்தம், 42

பெண்டுகள் மெத்தப் பெருகி மதுத்தாலே
கண்டவனைக் கூடிக் கலவிசெய்வார்—தொண்டாக, 43

முன்னாலே பெண்ணுருவ முக்கோண மாய்க்குழந்தை
பின்னாலே யாண்போல் பிறந்துவிடும்—இன்னமுமே, 44

ஆண்பிள்ளை யென்ன அறிவறிதாய் நேரான
ஆண்மீசை பெண்ணுக் கமைந்திடுமே—ஆண்டனுக்கு, 45

மீசை யரும்பாமல் மெய்யுங் குறிக்கரிதாங்
தேசங்தோறு மிவையே சோர்ந்துவிடும்—காசினியில், 46

ஆண் பெண் ணுருவில்லா தலிப்பிள்ளையே பிறக்கும்
காணரிதா யின்னங் கனதிரிபாங்—தோணுகின்ற, 47

கோழிமுட்டை யொன்றினிலே குஞ்சிரண்டு மூன்றுவருங்
கோழியாம் பெட்டையது கூவுமே—பாழாக, 48

வெள்ளத்தினுற் சிலவூர் மீளாமற் பாழாகும்
விள்ளுமிடி யாற்சிலவூர் வேகுமே—பள்ளமதாய், 49

தாழுஞ் சிலவூர் சமுத்திரம் வந்தே பெருகும்
வாழுஞ் சிலவூர் மகிழ்ச்சியுடன்—ஊழ்வினையால், 50

மண்மாரி பெய்துவிடும் மாரும லெங்கெங்குந்
திண்மையுள்ள வேந்தர் சீர்மாறிப்—புண்ணுவார், 51

உண்டுபண்ணி வைத்த ஒருபொருளைத் தேடாமல்
கண்டதெலாந் தெய்வ மெனக் கையெடுப்பார்—சண்டாளர், 52

பேயும் பெருங்குரங்கும் பித்தனையுங் கைதொழுவார்
ஆயுமெய்த் தேவனிலை யாங்கறியார்—தீயகரும், 53

நஞ்சுடனே பேயாலு நாடு மறந்தாலுந்
துஞ்சையிலும் பில்லி சூனியத்தா—லுஞ்சேறி 54

கொன்றிடுவார் பாவக்கொடுமை தனையுணரார்
பன்றிபோல் தின்றுபகை பாராட்டி—நன்றிகெடத், 55

தீவைப்பார் வீடுகளில் தின்மை பெருங்கப்பல்
பாயறுத்துப் பொல்லா பழிவிளைப்பார்—ஓயாமல், 56

சின்ன குழந்தைக்குச் சிற்றின்பந் தோன்றியே
மன்னு கபடான வார்த்தை சொல்லும்—இந்நிலத்தில், 57

பாவ மினிப்பாகும் பாழாகும் மானிடர்க்குக்
காவலும் புண்ணியங் கசப்பாகும்—மேவ, 58

ஒருத்த னுடன்பிறகே ஒன்பத்தெட்டுப் பெண்கள்
திருத்தமற வேதிரிவார் தேடி விருப்பமுடன், 59

தாய்தந்தை நன்னெறியைத் தாங்கடந்து நீசவழி
சேய்நடக்கப் புத்தியதுசெப்பார்கள்—நேயமுடன், 60

வேதக் கலகமுண்டாம் வேதமதை யேபுரட்டி
வேதம் பலவாய் விதித்திடுவார்—பூதலத்தின், 61

சனங்கள் வளர்ச்சிகுன்றுந் தாக்கும் பெரும்பிணியால்
சனங்களுக்கு ஆயுள்தான்குறுகும்—பனைமேவும், 62

கள்ளச் சிறுகருங்கட் காக்கையின் முட்டையினில்
வெள்ளைகாக்கை பொரிக்கு மேதினியில்—வெள்ளையாம், 63

கொக்கு குருவியுடன் கூடிப் புணர்ந்திடவே
கொக்குக் கிரண்டுநிறங் கூடிவரும்—அக்கினிசேர், 64

சூரியனுங் கிட்டே தொடுத்துமிகக் காய்ந்துவிடும்
ஊரதிலே பிள்ளைப்பல் லோடுதிக்குஞ்—சூரியனின், 65

வெய்யி லுரமதினல் மேரு மலைவெடித்துப்
பொய்யாவே மோதிப் பொடியாகும்—வையகத்தில், 66

அம்மி மிதக்கவைப்பார் ஆகாயமாய் வெளியில்
செம்மையுடன் தேருஞ் செல்லவைப்பார்—நம்மியாகள், 67

வாரிகடல் நீர்பெருகி வந்துவிடு மெப்போதுஞ்
சீரின்றிப் பூமி திடலாகும்—பாரினிலே 68

நாளொன்றிற் கோழி நயந்திரண்டு மூன்று முட்டை
மாளாம லிட்டுமறுநாள் பொரிக்கும்—மீளவுமே, 69

மூன்றுதலை மூன்றுசிறை மூக்காலு மேகூடித்
தாண்டுசே வற்குஞ்சு தான் பொறிக்கும்—நீண்டவிழி, 70

பெண்கள் வயிற்றினிலே பேய்மிருகம் போல்பிறக்கும்
பெண்கள் பெருநாள் பிசகியொரு—வன்பேரில், 71

அஞ்சுபிள்ளை ஆறுபிள்ளை ஆகடிய மாய்ப்பிறக்கும்
வஞ்சியர்கள் பிள்ளையத்தால் மாய்வார்கள்—மிஞ்சுகின்ற, 72

நாலுமுக மாறுமுகம் நாடியே வேறுறுப்புத்
தோலெலும்பு மாய்குழந்தை தோன்றிவிடும்—வாலுடைய, 73

மாட்டுடனே யாட்டு வயிற்றினிலு மானிடர்போல்
வாட்டமறவே பிறந்து மாண்டுவிடும்—நாட்டி[illegible]ல, 74

முன்னொருத்தன் கொண்ட பெண்டை மோகமுடன் பின்னொருத்
நன்னயம தாயெடுக்க நாடுவான்—இன்னமுமே, [தன் 75

நாட்டுக்கு ராஜாங்கம் நாலிரண்டு மூனருகும்
வீட்டுக்கோர் நாட்டாண்மை மேவுமே—நாட்டுக்குள், 76

பெண்டனுக்கு ஆண்வலியும் பேரறிவு முண்டாகும்
ஆண்டனுக்கு பெண்ணறிவும் அவ்வியல்பும்—தோன்றுமே, 77

அள்ளற் றிறைகடலிற் ஆர்வளங்கள் தான்குறைந்து
அல்லார் மலையு மசையுமே—துள்ளிவிழும், 78

மீனுக்குக் காலுமுண்டா மேவுமத்திப் பூத்தோன்றும்
கான்கதலித் தார்வெட்டக் காய்க்குமே—ஊனுடைய, 79

மாட்டுக்குக் காலதிக மாய்த்தலையு மாறிவிடும்
ஆட்டுக்கு மப்படியே யாகுமே—நாட்டிலழுங், 80

கத்தரியும் பூசினியிற் காய்க்கு மரிவரிதாய்க்
கத்தரியில் வேறுவிதங் காய்க்குமே—நித்தம், 81

மனுஷர் மனுஷரைத்தான் மாபசியாற் றின்பார்
மனுஷர்தம் புத்தியது மாறிவிடும்—வனமதில்வாழ், 82

பாம்பு மெலிக்குப் பயப்படுமே கீரியினம்
பாம்புக்கே யஞ்சிப் பதுங்குமே—வீம்பான, 83

நாயை முயல்மிரட்டும் நானிலத்திற் பொல்லாத
பேயும் பயந்தோடும் பெண்கொடுமை—பாயுங்கால், 84

யானையும் பூனையைக்கண் டஞ்சுமே யக்காலந்
தேனுங் கசப்பாகுஞ் செகத்தோர்க்கு—ஈனமில்லா, 85

வாழ்மிருகஞ் சால மருண்டஞ்சி யேநடுங்கக்
கீழ்மிருக மேலாய் கெலிக்குமே—தாழாமல், 86

நட்சத் திரங்களெல்லாம் நன்பகலே தோன்றும்
நட்சத் திரங்கோட்டை நண்ணுமே—உச்சிதமாய். 87

முப்பதுநாள் நாற்பதுநாள் மூடி மழையடிக்கும்
செப்பரியதால் வல்லிருளுஞ் சேருமே—கப்பியே, 88

காட்டின் மிருகங் கனதடங்கள் தோன்றாமல்
நாட்டில் மருவி நடமாடுங்—கூட்டமாய், 89

வெள்ளை நரியுடனே வெண்குயிலுஞ் செங்கரியும்
வெள்ளை கரடிகளு மேவுமே—விள்ளரிய, 90

வெள்ளப்ப பருத்தியிலே மேவுங் கரும்பருத்தி
வெள்ளரும்பு செவ்வலராய் வேறுபடு—மெள்ளவே, 91

மைபோல் கருத்த மயிர்மாறி வெண்ணிறமாய்த்
துய்ய குழைந்தைக்குத் தோன்றுமே—வையகத்தில், 92

ஆட்டின் வயிறதனில் யானையுடன் குரங்கும்
மாட்டினிலே சிங்கமது வாய்ப்பிறக்கும்—நாட்டில், 93

கோழிமுட்டை நாற்கோணங் கொண்டு மதின்மேலே
சூழுமயிர் நெருங்கத்தோன்றுமே—ஆழ்பாரில், 94

வாலுடனே பிள்ளை வகைவகைய தாய்ப்பிறக்குந்
தோலுடனே நீண்டமயிர் தோன்றிவிடும்—நாலுடன்கை, 95

இல்லாமற் பிள்ளை இடர்முண்ட மாய்ப்பிறக்கும்
சொல்லாற் சிறித்துவிடுந் தோன்றியபின்—நல்ல, 96

வயிறு முதுகில் வருமே முதுகும்
வயிற்றிடத்திற் றோன்றும் வகுப்பாய்—கயலென்ன, 97

கண்ணிருக்கு மேற்றலையிற் காணச் சடையுமுண்டாம்
வண்ணமற வேபிறகே வாயாகும்—தின்மைசேர், 98

ஓர்காலும் ஓர்கையும் ஓர்செவியும் ஓர்கண்ணும்
நேர்மாறிப் பெற்றிடுவார் நேரிழையார்—பாரில், 99

கடைவாயிற் சிங்கப்பல் காணச் சில சேய்க்குத்
தடமார்பிற் பெண்கொங்கைச் சாரும்—படந்தாழும், 100

பாம்பதுபோ லேபிறந்து பார்மீதிலே தவழ்ந்து
சாம்பிள்ளை மெத்தவிந்தத் தன்மையதாய்—ஆம்புவியில் 101

ஆனையைப் பூனைமா வாகடிய மேபுரியும்
பூனையுட னெலிவெம் போர்செய்யும்—மானனையார், 102

அஞ்சுவய தாறுவய தாகுமுன்ன மேசமைந்து
கொஞ்சவய திற்கருப்பங் கொள்ளுவார்—மிஞ்சிவெகு, 103

குட்டி மிருகங் குறையின்றிக் கன்றீனும்
இட்டபயிர் சீக்கிரத்தி லேவிளையு—முட்ட, 104

அழியுநாள் கிட்ட அடுக்கையிலே யெல்லாஞ்
சுழிபோல மாறிச் சுருங்கி—யிழிவாகுங், 105

காணுவதிசயங்கள் காணுமே காசினியில்
தோணுதெல் லாமிக்கத் தோணுமே—நாணமுடன், 106

அஞ்ஞான தேச மதிலுழலு மானிடர்க்கு
அஞ்ஞான மாயை அகன்றுவரும்—அஞ்ஞான, 107

சாஸ்திரங்கள் பொய்யாத் தவறிவிடும் மெய்ப்பொருளை
தோத்தரிக்க நல்லுணர்வு தோன்றிவரும்—தாத்திரியில், 108

வெள்ளை நிறமனிதர் வேறூர் தனினின்று
வெள்ள மெனப்பெருகி மேவுவார்—கள்ளமில்லா, 109

வேதம் பெருக விளக்கும்பெருஞ் சண்டையிலே
தீதில் வெகுமாந்தர் செத்திடுவார்—பூதலத்தில், 110

கறுத்த மனிதரவர் கைக்குடையிற் றன்படுவார்
திருத்தமுடன் பாஷை தெளிந்தே—பெருத்தவவர், 111

சாதியு மொன்றாஞ் சர்வேசுரனுடைய
வேதமு மொன்றாய் விளங்குமே—தீதணுகாச், 112

சத்தியவே தத்தரசர் தாஞ்சீமை யெங்கணுமே
அத்தன் செயலாலே யாளுவார்—நித்தியமுங், 113

காரணமா மெய்யோர் கடவுள் தரும் வேதமது
பேரணிய தாகப் பெருகியபின்—சாருகின்ற, 114

பாதி மனுவோர்கள் பக்திவைப்பா ராண்டவர்மேல்
பாதி மனுவோர்கள் பக்தியின்றிப் -போதித்து, 115

ஓர் தகப்பன் பிள்ளையென் றுட்பட்சம் வைத்தோர்கள்
சீர்கெடப் பல்பேதஞ் செப்பிடுவார்—பாரில், 116

குருக்களுக்குள்ளே கோடி பகையாம்
குருபுத்தி கேளார் கொடியோர்—குருவால் 117

சிலபேர்கள் கெட்டிடுவார் தெய்வ மறையை
மலையுறவே பொய்யிசைத்து மாற்றிச்—சிலைமீது, 118

தற்பரன்றான் தந்தமறை தானிதுவே சீர்திருத்தி
நற்பெரிய போதகர்நாம் நாடெனவே—அற்பர்கள், 119

போதித்துத் துன்மார்க்கப் போதனைகட் கேயிசைத்து
தீதுற்ற மூடருப தேசிகளாய்—வீதிதனில், 120

பேயெனவே தந்திரங்கள் பேசும் வயிறுடைய
தீய சனங்களதில் சேருவார் ஞாயமின்றி, 121

அல்லலுறுங் காலத் தடுத்துவரு நூதனத்தைச்
சொல்லிடவு நாவுளதோ தொல்லுலகில்—புல்லறிவால், 122

இந்த விதமாக இருக்குமந்த நாளையிலே
அந்திக் கிறீஸ்தென்றோ ரநியாயச்—சிந்தையுள்ளான், 123

காரிள்யா மத்துதிப்பான் காலைப்போ தொப்பாகச்
சூரியனுந் தோன்றுமெனச் சொல்லுகின்றார்—வீரமுடன், 124

இப்புவியி லேவளர்ந்தெல்லாக் கொடுமையிலும்
முப்பானுண்டாக முயன்றிருந்து—தப்பாமல், 125

மூன்று வருஷ முலகமெல்லா மாண்டிருப்பான்
மூன்று வருஷ முழுபஞ்சந்—தோன்றுகையில், 126

பேய்களெல் லாங்கூடிப் பேசுகிற செய்திவகை
நேயமுடன் சொல்வேன் நினைவாய்க்கேள்—ஞாயமுள்ள, 127

சத்திய நல்வேதந் தாரணியெல்லா மாச்சு
நித்தியமு நம்மையார் நேசிப்பார்—இத்தருணம், 128

அந்திக் கிறீஸ்து அரும்பாவி தன்மனதில்
நந்தமர்க ளோடொன்றி நாம்புகுந்து—வெந்தழற்கு, 129

நாணுகின்ற மானிடரை நாமே கெடுத்துவிட
வேணுமென்று பொய்பேசி வேஷமுடன்—நாணமில்லா, 130

அந்திக் கிறீஸ்தின் அருகேபோய்ச் சேர்ந்ததனால்
புந்தியிலான் செய்யும் புதுமைகேள்—தந்திரமாய், 131

பில்லியுஞ் சூனியமும் பேய்மாயமும் புரட்டுஞ்
சல்லியமு மொட்டியமுஞ் சாலங்கள்—கொல்லுகின்ற, 132

ஏவலிற் றேர்ந்தின்பாய் ஏறிவருவான் பேய்மேல்
ஆவலுடன் பன்றிபோ லாகிடுவோன்—சேவலுடன், 133

பூனைபோல் நாய்போல் புகழுகின்ற சிங்கம்போல்
ஆனைபோல்ரூப மவனெடுப்பான்—மானைப்போல, 134

பாய்வான் வெகுதூரம் பட்சிகள்போல பறப்பான்
தோய்வான் நெருப்பிற் சுழன்றெழுவான்—பேயதனால், 135

வெட்டரு வித்தை விளைப்பா னிரும்புதனைட்
கட்டுமற மாயங்கள் காட்டுவோன்—வட்டமாங் 136

கார்கடலின் மேல் நடப்பான் காணா தொளித்திடுவோன்
தோர்வையற வப்பால் தோன்றுவான்—வாரளகப், 137

பெண்டாக வெல்லாப் பெரியோரை யேயடக்கிச்
சண்டாள னான சதிபாவி—கொண்டாடும், 138

நான்சருவ ஈசனென நாடோறுஞ் சொல்லிடுவோன்
வான்புவியை யுண்டு பண்ணிவைத்தனென்பான்—மீனுலவும் 139

மாகந் தனிலிருந்து வந்தேனா னுங்களுக்கு
ஏகபரன் வேறே யிலையென்பான்—ஆகையால், 140

என்னை வணங்கிடுங்கள் என்பாதம் நம்பிடுங்கள்
தன்னிக ரில்லானான் றானென்பான்—பொன்னுலக, 141

மோட்சந் தருவேனென்று மெய்போல் மொழிந்துபரன்
ஆச்சரியந் தேறா வரும்பாவி—கூச்சமறக், 142

கும்பிட்ட பேர்களைத்தான் கொல்லாமல் விட்டிடுவான்
கும்பிடாப் பேர்களைத்தான் கொன்றிடுவான்—வம்பிட்ட, 143

வீரியத்தைக் காட்டிடுவான் மென்மேலும் புண்ணியத்தின்
காரியத்தைச் செய்வோரைக் காய்திடுவான்—சீரியலும், 144

பூலோகமெல்லாம் புகழ்பெறவே யோர்குடையி
னாலோக நாதனென வாளுவான்—சாலவெகு, 145

பாவம்பெருகுதற்குப் பன்னாளு மார்வமுற்று
தேவ பராபரனைத் தேடவொட்டான்—தேவனுக்காய், 146

வையகத்திற் கொஞ்ச மானுடர் தலைகொடுப்பார்
மெய்யைவிட்ட மாந்தர் மிகவுண்டு—ஐயமுற்று, 147

எல்லாருங் கெட்டுஇழிநரகிற் போனதினால்
வல்லவொரு கர்த்தர் மனதிரங்கி—சொல்லரிய, 148

ஏனோக் கெலியாசு வென்ற விருமுனிவர்
வானந் தனிலேயோர் மண்டலத்திற்—றானிருந்து, 149

அந்திக் கிறீஸ்து அரும்பாவி யானவன்முன்
வந்தவர்கள் சொல்கின்ற வாறுகேள்—புந்திமருண், 150

டேண்டா மகனே நீ யிவ்வா றியற்றுகின்றா
யாண்டவன்றன் கோபத்துக் காளாக—வேண்டாங்காண், 151

தீர்வை வரும்போது செத்திடுவா யுன்னுயிர்தான்
வேறெனவே தீநரகில் வேகுமே—ஆருடலைப், 152

பேய்கள் கடித்திழுக்கும் பெருநரக வாக்கினையால்
ஆயுந் துணையங்கே யார்வருவார்—ஞாயமின்றிக், 153

கெட்டுவிட்டபின்னே கிலேசமுற்றா லென்ன பலன்
எட்டாப் பரஞ்சோதி எம்மிறையை—கிட்டுவாய், 154

உன்னைப்படைத்துனக்கு ஊன்முதலாய்த் தந்தவொரு
தன்னிகரில் லான்றாளைச் சாரெனவே—அன்னவர்கள், 155

சொன்னவுடன் மாகோபஞ் சூடாகவேபெருகி
என்னைப்படைத்த இறையவனுண்—டென்னுமுமைக், 156

கொன்றுடலை யேபிளந்து கூறிட்டு வைத்திடுவேன்
என்றவுட னவ்விருவர் ஏதமற—விண்டதுகேள், 157

பில்லியுஞ் சூனியமும் பேய்மாய முப்புரட்டும்
எல்லாங் கடவுள்முன் ஏதாகும்—கல்லார்கள், 158

சாமியென்று வுன்னிடத்தில் தான்சோறு கேட்பதினால்
பூமியிலே நீயே பெருந்தெய்வ—மாவென்று, 159

எண்ணாதே பேய்மாய்க என்று நில்லா துன்னுடலம்
மண்ணுக் கிரையாக மாண்டுவிடும்—அண்ணலாம், 160

ஆதிபர னுன்செல்வம் யாவு மழித்திடுவார்
நீதிக்குள் ளாவாய்நீ நிச்சயமாய்—வேதனையால், 161

கூவியழுதாலுங் கூலிகளை வைதாலும்
ஆவதென்ன போவென்றங் கேயிருந்த—பாவிகளை, 162

கண்டுரைப்பார் நீசப்பேய்க் காதகத்தை நம்பியதன்
தொண்டரென நீங்கள் தொழிலாமோ—அண்டபிண்டம், 163

மேதினியில் லாம்படைத்த மெய்யான தெய்வமென்றால்
சூதுடனே சோறுதரச் சொல்லுமோ—வாதுடனே, 164

கண்ணைக்கெடுப்பனென்று காங்கலுடன் சொல்லிடுமோ
கொன்றிடுவே னென்று கொலை—கொள்ளுமோமண்ணுலகில், 165

தன்பசியைத் தீர்த்துவிடத் தள்ளாது பேயதுதான்
உன்பசியைத் தீர்க்க வுவக்குமோ—கண்கெட்ட, 166

பாவிகளா நீங்கள் படுகுழியில் வீழாமல்
தேவபரனெறியைத் தேடுங்கள்—ஆவலுடன், 167

கண்டதெல்லாந் தெய்வமெனக் கையெடுக்கவேண்டாமென்
றன்றெழுதி வைத்தா ரருந்தேவன்—கண்டறிமின், 168

பாருலகுந் தேவுலகும் பாதலமும் பல்லுயிரும்
ஓர்நொடியி லோர்மொழியா லுண்டாக்கி—நேரான, 169

ஓர்குடைக்கீழ் மூவுலகு முள்ளடக்கி யாண்டருளுஞ்
சீர்நிறைந்த தேவதிருவருட்கோர்—நேருளதோ, 170

தான்படைத்த மானிடர்கள் தாழ்நரகிற் போகாமல்
வான் விட்டிறங்கிமனுவாக—வூனெடுத்து, 171

சொல்லறிய போதகமுஞ் சோகுசெய்யுந் தந்திரத்தை
வெல்லுதற்கு விஞ்சை விளக்கியபின்—புல்லருக்காய், 172

மன்னு சிலுவையின்மேல் மாண்டிறந்த தன்னுடலுஞ்
செந்நீரும் போசனமாய்ச் செய்தளித்தோன்—தன்னையே, 173

தேடாமல் சீமலமுஞ் செந்நீருந் தோல்நரம்பும்
நாடாத நாற்றமாய் நாறுடற்கூண்—தேடுதற்குச், 174

செத்தபின்பு தீநரகில் சேரும்புன் வஞ்சகனை
யத்தனென வேவணங்க லாகுமோ—பித்தர்காள், 175

என்றிவ்வா றேனோக் கெலியாசு மாந்தருடன்
கென்றியும்பும் போதகத்தின் சீர்கெட்டுக்—நன்றிமிக, 176

அந்திக் கிறீஸ்தாம் அரும்பாவி தன் கண்ணில்
செந்தீ யெழச்சீறித் தீதிலரை—நிந்தையாய்க், 177

கானத் தகர்மேல் கடுஞ்சீயம் வீழ்ந்தாற்போல்
ஊனறியும் வாளால் உயிர்பரிக்க—வானத்தில், 178

உம்பர்கள் சூழ வுயர்ந்தகிரீ டந்தாங்கி
அம்பரத்திற் சென்ற வலங்காரம்—இம்பர்யாம், 179

சொல்லமன வாக்கடங்காச் சோதியா நந்தமெனுஞ்
செல்வமா மோட்சஞ் சிறந்திருந்தார்—நல்லறிவால், 180

புத்தியுரைத்தோரைப் பொல்லாதான் வெட்டிடபின்
மெத்த மகிழ்வாய் விண்மறந்தோன்—குத்திரஞ்செய், 181

பேயின்மே லேறிப் புறப்பட்டு வான்வாழும்
நேயகடவுளென்று நேரில்லாத்—தூயதிரு, 182

சேசுநச ரேத்தென்றுந் தேவனு னென்றுசற்றுங்
கூசாமற் சொல்லிக் கொடுமையாய்ப்—பேசத், 183

தனக்குவமை யில்லாதான் ருனேவ வான்வாழ்
இனச்சேனைத் தன் தலைவ னேதில்—கனமிக்கேல், 184

அண்டமுழங்கிடவே ஆகாயத்தைக் கிழித்துக்
கொண்டுவந்து பொல்லாக்கொடியனையே—துண்டுதுண்டாய், 185

வெட்டி யெரிந்த பின்பு வேகாமல் வெந்திடவே
மட்டிதனைப் பேயிழுத்து வாழ்நகரில்—கிட்டியகால், 186

சாமியென் றேயவனைச் சாஷ்டாங்கஞ் செய்தவர்கள்
பூமியிலே நின்று புலம்புவார்—பூமியெல்லாம், 187

உண்டுபண்ணிவைத்த வொருவனிவன் றனெனவே
மண்டலத்தில் நாம்வணங்கி மாமோசங்—கொண்டோமே, 188

என்றே யலறிநம் மேகபரனைப் பணிந்து
நின்று பெரும்பாவ நினைவொழிந்து—நன்றாக, 189

நின்றார் சிலநாள் நெறிகெட்டுப் பேய்நேயங்
கொண்டார் தவமிழந்தார் கோதுற்றார்—நன்றி, 190

மறந்தார் பகைமிகுத்து மன்னுயிரைக் கொன்று
அறமென்ற நாமம் அறியார்—வரவரவே, 191

செய்யாத தீத்தொழிலுஞ் செப்பவொண்ணு அக்ரமமும்
வையகத்தி லெங்கு மலிவதனால்—தெய்வகடுங், 192

கோப மிகவாகிக் கொடும்பாவஞ் செய்தலைந்து
பாவிகள்மே லேசுமந்து பாருலகி—லாபத்து, 193

நேரிட்டு வட்ட நெடுங்கடலுந் தான்வெற்றி
யேரிநதி யெங்கு நீரில்லாமல்—பாரில், 194

புகையெங்கும் மண்டியண்டம் பூவுலகில் வீழும்
வகைவான் முழங்கு மலையதிரப்—பகையாய், 195

அக்கினிமாரி யகிலமெல்லாம் பெய்திடவே
நெக்குவிட்டுப் பூமி நெருப்பாகித்—திக்குகளில், 196

நீங்காத கன்மலையு நெர்மெழுகு போலுருகும்
வாங்காம லேசொரியும் வன்னியது—வோங்கவே, 197

தீயாறுயோடிவிடும் தேர்கோவில் கோபுரமுஞ்
சாயாக்கற் கோட்டைகளுந் தானழிய—ஆயழலால், 198

செம்பு லையிற் பட்டுச் சிவந்தாடி ஞர்போல
அம்புவியே காய்ந்தெரிய அம்புலியும்—வெங்கதிரும், 199

மண்ணில் மறைந்துமங்கி வான் வழிபோக் கற்றுநிற்ப
கண்ணிற் படாமற் கரந்து நிற்கும்—விண்ணுடுக்கள், 200

இப்படியாய்த் தின்பொருள்க ளெல்லாம் கரிந்துவிட
தப்புவரோ மாந்தர் தணலாவார்—அப்போது, 201

எக்காள மூதி எழுமி னெழுமினென
மிக்கேல் மரித்தோர்க்கு விள்ளவே—அக்கணமே, 202

செத்த மனிதரெல்லாந் தேகத்தோடே யுயிராய்
அத்தனுரையாலே அன்றெழுவார்—புத்திகெட்ட, 203

பாவிசனங்கள் படர்பசியுந் தாகமுடன்
தீவினையுஞ் சூழத்தருமாந்து—ஒவியம்போல், 204

நிற்பார் நிலைகலங்கி நெஞ்சயர்ந்து நாவரண்டு
பற்கள் தெரிக்கும்படி கடித்துச்—செப்புவார் 205

நன்றான கால நமக்கிருந்த போது தவம்
விண்டோமே மேலோர்கள் மென்முறையைக்—கொண்டிலம் 206
[யாம்

புத்திசொல்லும் பேரைப் புரட்டினோம் தீயவரை
கத்திப் பெரும்பிணிகள் நண்ணினோம் அத்தருணம் 207

சாவுகின்ற காலமது சம்பவித்த பின்னுமின்று
மேவிய தீர்வைக்கென் விளம்புவோம் கூவி 208

அழுதுபுரண்டும் அறைந்தும் பலனென்ன
தழனரக நம்மைத் தவிர்க்காதென்—றழுதிடவே 209

புண்ணியவான் களெல்லாம் பூரணச் சந்திரன்போ
லெண்ணு மிளமைகொண் டேயிருப்பார்—வண்ணமுள்ள, 210

மோட்சத்திலிருந்து நல்ல மோட்சத்தோர் தாமிறங்கு
மாச்சரியஞ் சொல்ல வடங்காது—காட்சியில், 211

சூரியன்போற் காந்தி சுடரொளியாய் விண்ணோர்கள்
நேரின்றிச் சூழ்ந்து நெருங்கிவர—ஏர்மிகுந்த, 212

பாதமதிற் சந்திரனும் பானுடையு மீன்குடியும்
சீதப் பிரபை திகழவே—கோதில்லாக், 213

கொஞ்சப் பிராயமதாய்க் கோடிவரம் பெருக
மங்கவின் மேலேறி வான்வரவே தஞ்சமதாய், 214

தம்பூரு வீணை சரமண்டல முரசு
கொம்பூதி பாங்காக் குழல் முழங்கச்—சங்கையாய்க், 215

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS No. 1132444

கட்டியங்கள் கூறக் கனதாள மேமுழங்க
அட்டதிக் கெல்லா மதிரவே—திட்டமுடன், 216

சங்கீத வாத்தியத்தைச் சம்மனசோர் பாடிவர
மங்காத வானோர் மகிழ்ச்சியுடன்—அங்கத்தின், 217

காந்தியொளி வீசக் கனவணக்க மேபுரிந்து
ஏந்திவரப் பாதமதை யின்பமுடன்—சாந்தகுணத் 218

தாயார் வலதுபுறஞ் சாமியிடதுபுறம்
மாயாவில் வீச வருவார்கள்—நேயமுள்ள 219

சென்னியிலே முண்முடியுந் தேகமெல்லாங் காயமதா
யுன்னதமாஞ் சோரி யொழுகவே—பின்னையுந்தான் 220

செய்ய விலாவில் திருக்காய முந்துலங்கத்
துய்ய நரம்பெலும்பு தோன்றுகின்ற—மெய்யுடனே, 221

மேகத்திற் றோன்றிமா விண்ணோ ருடனிறைவன்
வாகுடனே மாமலையில் வந்தபின்பு—மாகபரனே, 222

மேனி சிவந்து விழி சிவந்து வேகமுடன்
யானையைச் சிங்க மடுத்தாற்போல்—மானதனை, 223

வேங்கை தொடுத்தார்போல் வெண்குருவி கூட்டமதைப்
பாங்குடனே ராசாளி பாய்ந்தாற்போல்—தாங்குகின்ற, 224

மேக சிங்காசனத்தில் வேத னிருந்துகொண்டு
ஆகமது நைய வடிப்பட்டித்—தாகமுடன், 225

பாடுபட்ட நற்சிலுவை பக்கம் வலநாட்டி
தேடுலக்கோர் செய்தநன்மை தீவினைக்கு—நாடறிய, 226

நீதி விளக்க நெறியே நடந்துவந்த
மாதவராம் நல்லோர் வலதுபுறம்—தீதுவளர், 227

பொல்லா ரிடது புறமாக நின்றபின்பு
நல்லோர்க ளாசை நயமுற்றுச்—சொல்லுவார், 228

என்னுடைய வையா நீ ரென்றுவரு வீரெனவே
நின்னையே நாங்கள் நினைத்திருந்தோம்—நன்னயமாய், 229

பெற்றவளே தானறிவாள் பிள்ளை தனதருமை
மற்றவர்கள் தானறிய மாட்டார்க—ளூற்ற, 230

மழைமுகங்கா ணாப்பயிர்போல் வாடினேந் தாயை
யழும்பிள்ளை காணா ததுபோல்—குழம்பினேம், 231

ஒன்றுமிலாக் காலமதி லோர்மொழியால் வையகமும்
துன்று பலபொருளுந் தோற்றுவித்தீர்—நன்றிகெட்ட, 232

அக்ஞான மாயை யவனியெல்லாஞ் சுற்றிலுமவ்
வக்ஞானத் துள்ளே யடியோர்கள்—தொக்காமல், 233

மீண்டெடுத்துக் கொண்டீரே வேதாவே யென்றுரைத்து
ஆண்டவனை வாழ்த்தி யதன்பின்பு—ஆண்டவளை, 234

பாரார்த்துரைப்பார்தாயே பராபரியே யாண்டவளே
சீர்த்த தயைக்கடலே செங்கதிரைப்—பார்த்தவளே, 235

மோக்ஷந் தனிலெமக்காய் முப்பொருளொன் றானவனைத்
தாக்ஷியுடன் வேண்டினையே தாய்மரியே—மோக்ஷத்தின், 236

அர்ச்சிய சிஷ்டர்களே யாண்டவனை வேண்டினதால்
சொற்யெரிய உங்களுக்குத் தோத்திரமென் றற்புதமாய்ச் 237

சொல்லி வணங்கித் தொழுவார்கள் பாவிகள்தான்
நல்லபரனைப் பார்க்க நாணமுற்று—அல்லலுடன், 238

கூகூவென்றே யழுது கொண்டுநிற்கத் தேவபரன்
பாகொன்று சொல்லாற் பணிந்திடுவார் வாகொன்று, 239

வானவருஞ் சந்திரனும் மாகதிரு மின்னுடுவும்
மானமுறப் பல்லுயிரும் வண்மையுறத் தானமைத்து, 240

ஆங்காரங் கொண்டசில அண்டர்களென்பான் சபையில்
நீங்கா நரகில் நிறுத்தியான் பாங்காக, 241

ஆதிமகனை வகுத் தாங்கவனா லாம்பிதிர்க்கு
நீதிநெறி தந்தேன் நீர்பலுப் பாதகத்தைச், 242

செய்ததனால் முன்னந் திரண்ட பெருநீரால்
வையகத்தோர் தம்மை மடித்துவிட்டே னையமற்ற, 243

நோயனைக் காத்தே னுவலு மவன்பிதிர்க
ளாயும் புவியிலடர்ந்த பின்பு—தீயகொடும், 244

பாவம் பெருகினதால் பாழாக வைம்புரத்தை
வேகவெரித்தேன் வெவ்வழலால்—கோபமிகு, 245

பாரோன் பகைகெடவே பத்துகொடும் ஆக்கினையை
நோகத் தந்தேன் நீர்திருந்தப்—பாரதனில், 246

பாதை கடல்கொடுக்கப் பண்ணினேன் மாற்றலாகள்
வேதை படவதிலே வீழ்த்தினே—னாதரவாய், 247

சேசுவன்போர் வேலினின்று துன்னார் கெடக்கொன்றேன்
மோசமதை நீங்கள் முனியலை—பேசும், 248

செரிக்கோ வெனுநகரின் செய்யமதில் நீரு
யெரிக்கும்படி யோயலைத்தேன்—உருக்கமுள்ள, 249

தாவிதன் கைக்கவணால் சண்டாள ராட்சதன்மண்
மேவி விழமடித்து விட்டேனே—பூவுலகில், 250

இட்டமுட னீங்க ளெண்ணும் படியேயான்
இட்டபெருந் தீர்வை எண்ணரிது—துட்டர்கள், 251

தங்குந் தரைமீது சற்றேனு மெண்ணாமல்
பொங்குங் கடும்பாவம் புரிந்ததனால்—உங்களுக்கு, 252

வீடென்னும் மோக்ஷம் விலகுதென்று கண்டிரங்கித்
தேவருந் தீர்க்கத் தரிசிகளால்—பாடனைத்தும், 253

உங்கட் கறிவித்தேனொப்பாமல்நீர் பிடித்த
சங்கைக் கேட்டைபின்னுந் தான்புரிந்தீர்—ஓங்குகனால், 254

மாசுமிலேன் மாதுமிலேன் வல்லதொரு வானுமிலேன்
தேசுற்ற ஐவண்ணஞ் சேர்ந்திலேன்—மாசற்ற, 255

மோன வெளியாகி முச்சுடருந் தானாகித்
தானாயநாதி தற்பரன்யான்—ஊனுடைய, 256

மானிடன்போல் மண்ணகத்து மாது மரிவயிற்றி
லூனெடுத்துக் கன்மலையி லோர்சாரல்—தானெடுத்துப், 257

பஞ்சயைப் போலேயான் பாதியிரவதனில்
மிஞ்சு பனிகுளிரால் மெய்நடுங்கச்—சஞ்சலமாய்ப், 258

புல்லணையின் மீதே புரண்டழுதே நீங்கள்செய்த
வல்வினையை யெண்ணி மனம்வருந்தித்—தொல்லுலகின், 259

எல்லாவுயிர்க்குணவு மென்றுந் தருமிறையான்
புல்லருய்ய வேண்டிப் புலம்பியே—வல்லகன்னித், 260

தாய்கொங்கை யுண்டே தவிப்பிளைப்புத் தானடைந்தேன்
பாயுதிர மோடிடவே பார்மீதில்—சேய்க்குச், 261

செய்கின்ற சேதனத்தாற் சிந்தினது சோரிமிக
வையகத்தில் மெத்த வருந்தினேன்—கைவிரலால், 262

மூவுலக மேந்துமெனை மூவாக் கனியேந்த
தாவுமவள் தன்கரத்திற் றானொடுங்கி—மேவினேன், 263

மண்ணுலகிற் பாடுபட்டு மானிடரே யுங்களுக்கு
என்னுயிரைத் தந்தேன் ஈங்கிரங்கித்—தன்மயாய்ப், 264

பாடுபட்ட காயமிதோ பாருங்கட் பாவிகளே
ஆடுபட்ட பாடு வதுபோல்—நீடுபெரும், 265

பொற்பாணி நீட்டிப்புதைத்தடித்த காயமிதோ
கற்றூணிற் கட்டுபட்ட காயமிதோ—அற்பரெனைட். 266

பயித்தியக்காரனென்றும் பலவிதமாய் பேசிதலை
மயிரதத் தானிழுத்த வாறும்—உயித்தமாய், 267

வீசியிழுக்க விழுந்த நெற்றிக் காயமிதோ
தூஷணமா யென்முகத்திற் றுப்பியே—நேசமின்றி, 268

காலா லுதைத்த கனவீக்கக் காயமிதோ
மாலான நஞ்சுண்ட வாயுமிதோ—மேலான, 269

கன்னத் தடிக்கக் கலங்கிய செங் கண்களிதோ
உன்னரிய என்றன் ஒளிதிகழுஞ்—சென்னியிலே, 270

முள்முடியை வைத்துபெரு மூங்கிற் றடியாலே
துள்ள வடித்தவந்தச் சோரியிதோ—கள்ளனைப்போல், 271

பாரச் சிலுவை பதிந்ததிருக் காயமிதோ
வீரத்தாற் குத்துண்ட வீக்கமிதோ—கோரத்தால், 272

வாய்மூக்கி லன்று வடிந்த விரத்தமிதோ
பாய்மெய் நரம்பெலும்பைப் பாருங்கள்—தூய்மனதாய், 273

பார்க்க வடங்காத பாடுபட்டேன் கள்ளனைப்போல்
யார்க்குப் பகை செய்தே னம்புவியில்—சேர்க்கும், 274

பொருள்களவு செய்தேனோ பொய்பேசி மாந்தர்க்கு
மருள்கலகந் தோன்றபகை வைத்து—இருளதனில், 275

கன்னமிட்டு மாந்தர் கழுத்தை யறுத்தேனோ
மின்னிணையார் தம்மயலில் வீவ்ந்தேனோ—இன்னமின்னம், 276

என்ன குற்றஞ் செய்தேனோ னிப்படியே பாடுபடப்
பண்ணுமுங்கள் பாவப் பலனல்லோ—மன்னும்யான், 277

செய்த நன்றி யோராளவோ செய்தபொருட் கோர்வகையோ
ஐயமற வெல்லா மளித்தேன்—யுய்யுதற்கு, 278

எந்தனடையாள மென்னுஞ் சிலுவைதனை
இத்தரையில் வைத்தே னெண்ணுதற்கு—முந்தவே, 279

தூஷணித்தீர் பாவிகளே தூய்சிலுவை யானதைத்தான்
தூஷணித்தீ ரென்சபையுந் தொன்னறியும்—பூசிக்க, 280

அப்போ திருந்த வடையாள மானதெலா
மிப்போது பாருங்க ளென்னை—யெப்போதும், 281

கண்டேயறியாமல் காசினியிலென்சுருபம்
விண்டேபழித்தீர்கள் வீணர்கள்—பண்டுமுன்னே, 282

பொய்யைப்பீடித்துப் புலம்பி யலைந்தீர்கள்
மெய்யை யறியாமல் விட்டுவிட்டீர்—மெய்வழியாஞ், 283

சத்திய வேதமென்றால் தள்ளென்று சொல்லியதை
நித்தியமும் வேம்பாய் நினைத்தீரே—சத்தியரைக், 284

கேளிக்கை பண்ணிவைத்தீர் கேடாகத் தூஷணித்தீர்
வேலிகள் போட்டு விலக்கினீர்—தாலமதில், 285

சண்டையுங் காமச் சதிசெய்தீர் புத்தியக
விண்டோரை நாடாமல் வெட்டினீர்—மண்டலத்தில், 286

பிள்ளைக்கு நோய்தீரப் பெற்றெடுத்த தாய்மருந்து
கொள்ளுதல்போ லுங்கள் கொடும்பழிக்கு—உள்ளதொரு, 287

பாடுபட்டு நன்மருந்தாய்ப் பண்ணியவென் தேகமதுந்
தேடரிய செந்நீருஞ் செய்யணவாய்—நாடவைத்தேன், 288

பின்னுள்ள மானிடர்கள் பேசரிய சத்தியத்தை
நன்மையெனக் கண்டு நடப்பதற்கு—முன்னுள்ள, 289

பொய்க்குருக்கள் நீங்குதற்கும் பொய்மறைகள் மாறுதற்கும்
மெய்க்குருவை வைத்தேன் விளக்கமுறச்—சற்குருக்கள், 290

பட்டங் கொடுத்தேன் பரன்பூசை பண்ணெனவே
திட்டங் கொடுத்தேன் செகதலத்தி—லிட்டமுடன், 291

எல்லா வரமீந்தே னெந்தை பகைஞரையே
வெல்லவர மீந்தேனான் மேதினியில்—வல்வினையால், 292

உன்னைப் பகைத்தோர்கள் ஊழூழிகாலமெல்லா
மென்னைப் பகைத்தோர்களென்றேனே—யன்னதிரு, 293

சற்குருக்களைக் காணச் சண்டாளப் பாவிகளே
பொய்க்குறுக்களைக் கானப் போனீரே—சற்குறுக்கள், 294

சத்திய வேதந் தனையறிந்து கெட்டவர்க்கு
மெத்தவுண்டு வாக்கினைகள் மென்மேலும்—புத்தியுடன், 295

மூன்றாசையுங்கடந்த மோசமில்லாச் சற்குருவை
என்றான் பழித்தீ ரிடாறுகத்—தோன்றலெனும், 296

என்சீஷனைப் பழித்த தென்னைப் பழித்தவிதம்
என்ன வறியாதிருந்தீரோ—நன்மனதாய் 297

என்னைப் பணிந்தோர்க ளென்மக்க ளாவரென்று
முன்னே யறியா திருந்தீரோ—முன்னறிந்தும், 298

வேதமதி லுள்ளோர்க்கு வேகமுடன் தீங்குசெய்தீர்
பாதையை யாராய்ந்துநிதம் பாராமல்—தீதுடனே, 299

எந்தனுக்கு வேறுதெய்வ மென்றே மதிமயங்கிச்
சிந்தையுற்றுக் கண்டதெலாந் தெண்டனிட்டீர்—முந்த முந்த, 300

சன்மப் பாவம் போக்கத் தீட்சையும் ம[illegible]ரிய
கன்மப்பாவம் பொருத்தல் காத்தளித்தேன்—உன்னாமல், 301

தம்மாலே தாங்கெட்டுத் தாழ்நரகிற் போகின்றீ
ரெம்மாலே குற்றமில்லை யெள்ளளவும்—உம்மா, 302

லெமக்கோர் பலனுமுண்டோ வெப்போது மெம்மாலே
யுமக்குமிகு நன்மையுண்டு ஓ! யிழந்தீர்—எமக்கென்ன, 303

என்னை வணங்கிவந்தா லெப்போது மோட்சத்தில்
நன்மையுடன் வைப்பே னான் மகிழ்ந்து—கன்மமுற்று 304

ஊனமுள்ள கண்கள் ஒளியை பாராததுபோல்
ஈனரே நீங்க ளென்னைப்பார்க்க—நாணமுற்று, 305

மண்ணிற் பணத்தை மதித்தீர் மனம்பொருந்தி
யெண்ணினிரே வெள்ளை யிலையின்மேல்—நன்னுகின்ற, 306

ஆத்துமத்தின் பிழைப்பை யாராய்ந்து பாராம
லூத்தை யுடல்பிழைப்பி லொட்டிவிட்டீர்—நேர்த்தியுடன், 307

பூவுலகி லென்னைப் புகழ்ந்து நினைப்பீரெனவே
சாவும் பயம்பசிநோய் தானீந்தேன்—சாவதனில், 308

என்னை நினையாம லெப்போது மக்கியானந்
தன்னை நினைத்துத் தவித்தீர்கள்—பின்னையும், 309

தாரணியின் பாக்கியத்தைத் தான்விரும்பி யும்முடைய
சீரணியும் பாக்கியத்தைத் தேடினீர்—பாராகும், 310

மாடெங்கே யாடெங்கே வண்மையுடனே வாழ்ந்த
வீட்டெங்கே ராச விபரமெங்கே—நாடெங்கே, 311

பாக்கியங்க ளெங்கே பணமெங்கே காசுமெங்கே
யோக்கியங்க ளெங்கே யொழுக்கமெங்கே—பாக்கியத்தை, 312

நம்பி யெனைமறந்தீர் நாய்களே எப்போதும்
கும்பி எரிநரகில் கூடலுற்றீர்—சம்பிரஞ்சேர், 313

உல்லாசமெங்கே உயர்ந்த கடுக்கனெங்கே
சல்லாபமெங்கே சரசமெங்கே—பொல்லாத, 314

மேட்டிமைக ளெங்கே விருந்தெங்கே சுற்றமெங்கே
தாட்டிகங்க ளெங்கே தவமெங்கே—மேட்டிமையாய், 315

பெண்மீதில் வைத்தபட்சம் பேசருமென் மீதுவைத்தால்
வண்மையுள்ள மோட்சத்தில் வாள்வீரே—மண்மீதில், 316

பெண்ணையே நம்பிப் பெருங்கதியைத் தான்மறந்தீர்
எண்ணரிய நன்மை யியற்றுமெனை—யெண்ணியே, 317

இந்த உதவியெமக் கீந்த பரனெனவே
சிந்தையுற்றுத் தேடா திருந்தீர்க—ளித்தரையில், 318

அற்பவாழ் வுக்காக வன்புவைத்தீ ரவ்வாழ்வு
நிற்பாக்கிய முமக்கு நேர்ந்ததே—யெப்போதும், 319

என்பேரைச் சொல்லி யிருப்பவரை நானெனவே
யன்பா யவர்க்கன்ன மன்றளியா—திண்பமுடன், 320

தின்றுடலையே வளர்த்தீர் தேகமதி லாடைதான்
ஒன்றுமிலார்க் கோராடை யீந்திலீர்—நன்றிகெட்ட, 321

பாவிகளைத் தான்வதைக்கப் பண்ணிவைத்த தீயலகை
மேவியுற்றுப் பாராமல் வேண்டினீர்—ஆவலுடன், 322

பாவிகளே யும்முகத்தைப் பார்க்கவே ஞாயமுண்டா
பாவிகளே பேய்க்கடிமை பட்டீரே—பூவுலகில், 323

பொல்லாத பேயைப் பொருளெனவே நம்பியந்தப்
பொல்லாத பேயைப் புகழ்ந்தீரே—பொல்லாரே, 324

முன்னே பொறுத்த பொறைமுடிந்த தாதலினால்
வன்னரகி நீங்கள் மடிந்தெரிவீ—ரென்றவுடன், 325

பாவிக ளெல்லாம் பயந்து நடுநடுங்கிக்
கூவும் ராசாளிகண்ட கொக்கதுபோ—லாவிவிட்டு, 326

அம்பரன்றன் முன்னே அரும்பாவி யானபேய்
வெம்பியே சொல்லும் விவரங்கேள்—எம்பரனே, 327

பூவெடுத்து நானிவரைப் பூசையது பண்ணவைத்துக்
காவு கொடுக்கமுறை காட்டினேன்—பூவுலகில், 328

திட்டமுடனே யவர்கள் சிந்தித்துப் பூசிக்கக்
கட்டிவைத்தேன் பொய்ச்சரிகை காசினியில்—திட்டமுடன், 329

கனகதே ரோடவைத்தேன் கைகட்டி நின்று
எனக்குத் துதிபுரிய ஏவி—கனத்தபெருங், 330

கார்மலையைக் கும்பிடென்றேன் காவினிலே என்றனுக்குப்
பாறியப் பொங்கலிடப் பண்ணினேன்—கூர்விழிசேர் 331

மங்கைமே லாவேசம் வந்து படைத்ததனைச்
சங்கையுடன் தின்று சாற்றினேன்—அங்கவர்க்கு, 332

என்னுநான் தின்றேனென் றென்வயிற்றை யெக்கிவிட்டே
யிள்ளையுமே படைத்தார் போராக—வன்கபடம், 333

என்னை வணங்காதே யென்று தலைசிரைத்து
மின்னுசெருப் பாலடித்துவிட்டேன்—வன்னியதால், 334

தோளிலே சுட்டேன் தொலையாச் சிறைபிடித்தேன்
நாளுமே என்றனைத்தா னம்பிவந்தார்—நாளதனில், 335

அம்மணத்தோடு யலையவைத்தேன் பித்தரைப்போல்
செம்மைகெடப் பெண்கள் சீரருத்தேன்—அம்முறையால் 336

வெட்கி விடுவாரெனவே வேணவிதஞ் செய்தேன்
வெட்காம லென்னையே விரும்பிவந்தார்—மிக்கவே, 337

உன்றனுக்குச் செய்யு முயர்வான தண்டமது
வென்றனுச் செய்வாறென் றெண்ணியே—வந்தவரை, 338

என்கோவில் முன்னே யிருந்து வணங்காமல்
வன்பாய் வணங்கு வடக்கென்றன்—அன்பாகத், 339

தண்ணீருஞ் சூரியனுந் தாங்கா நெருப்புடனே
மண்ணையும்போய்க் கும்பிடவும் வைத்தேன்—மண்ணிலுள்ள, 340

மாடுடனே நாயும் வளருங் குரங்காகவும்
கேடுடைய தும்பியையும் கும்பிடென்றேன்—நாடதனில் 341

ஆண்குறியும் பெண்குறியும் ஆவலுடன் கும்பிடென்றேன்
வீணைச் செம்பருந்தை வேண்டென்றேன்—தோணுகின்ற, 342

நாலுவே தத்தினிலும் நான் வகித்து தந்திரத்தால்
காலாகோலத்தைக் கரந்தமைத்தேன்—மேலும் 343

சகல புராணத்தின் சருவேஸ்பரன் றனையே
புகலா தொழுகப் புணர்த்தி—மிகுகல்வி, 334

ஒன்முன தெய்வ மொருவனென வெண்ணமல்
நன்முன பெண்ணையே நாடவைத்தேன்—கன்றிடவே 345

பாருலகிற் சொன்னவதை பாராமற் கெட்டலைந்தார்
பாருமிதோ வென்பங்கிற் பட்டவர்க—சோகவென்று, 346

பேய்கள்தான் சொன்னபின்பு பேசரிய வாண்டவன்முள்
ஞாயங்கள் கேட்டு நலமரிய—நேயமுள்ள, 347

காவலாஞ் சம்மனசே கர்மியவர் செய்தநலநு
மேவியே சொல்கவென விள்ளுதற்கு— பாசமின்றி 348

நன்மையைக் காணுதால் நாணிநிற்கச் சம்மனசு
புன்மை யெழுந்துமிகப் பொங்கியே—நன்மையாய், 349

ஒவ்வொருவரைக்காட்டி யோதுமிவர் செய்தபவ
மிவ்வித மென்றே யிசைப்பதுகேள்—செவ்வையாய், 350

வேதத்தி லுற்றோர்மேல் வெங்கோபமாய்த் திரும்பி
நீதிசுதன் வார்த்தை நிகழ்த்தினார்—காதுரவே, 351

என்பேரைச் சொல்லிவந்தோர்க் கீந்தார்கள் காசுபணம்
உன்பேரைச் சொல்வோரை எட்டினார்—வன்கொடியர், 352

குட்டை மரக்காலாற் குறைத்தார்கள் தானியத்தை
வட்டியநி யாயமதாய் வாங்கினார்—நட்டமுடன், 353

வேதநா தனையொளித்தார் வேண்டுதலை யேமறந்தார்
நீதி விசுவாச நினைவிழந்தார்—மாதுடனே 354

மாய வாழ்வாலே மதிமயங்கிக் கெட்டலைந்தார்
தாயாருடன் மூத்தோரைத் தானடித்தார்—நேயமுள்ள, 355

பெண்டு மணமெரியப் பின்னொருபெண் ணாசைவைத்தார்
குண்டனியாற் சுற்றங்கொதிக்க விட்டார்—பெண்டுகள்தான், 356

கொண்டவனைப் பேணாமல் கூசாமலே யழகாய்க்
கண்டவனைச் சேர்ந்தார் கன்மனதாய்ப்—பண்டிதர்கள், 357

செய்த கொடுமையெல்லாந் தீயப்பேய் தான்சொல்ல
ஐயன் கேட்டுக் கொடியீ ராழ்நரகி—லுய்வீரெனச், 358

சொன்னவுடன் பேய்கள் சுறுக்காகக் கொக்கரித்து
அன்னவரை கெட்டி அழல்நரகில்—சின்னதமதாய், 329

பண்ணாத வாக்கினைகள் பண்ணிவைக்கு மோயாமல்
புண்ணாகமேனி பொசுங்கிடமே—பண்ணரிய, 360

சங்கிலிகொண்டே யடிக்குஞ் சாட்டையினாலே வீசும்
மங்கிடவே தீயினிலே வாட்டுமே—அங்கிக், 361

குறடுகள் கொண்டே பிடுங்கிக் கூசாமற் கம்பிச்
சரடுகள் கொண்டேவாயைத் தைக்குமே—முறடான, 362

வேலாலே குத்தி விலாவெலும்பெல் லாந்துளைக்குஞ்
சாலக் கொடுமெழுவைத் தான் சொரியும்—மேலெல்லாம், 363

பொல்லாத காந்தல் புகையுமகோரமதாய்த்
தள்ளாவிருட்டாகத் தானிருக்க—அல்லலுறும், 364

பாவிகள் நின்று பரதவித்துச் சொல்லுகிறார்
தேவனைத் தேடாதிருந்த தீங்கான—பாவமதால், 365

ஊழுழி கால மொழியாத தீநரகில்
பாழுடனே வேகப் பரிசுபெற்ளூம்—வாழ்கவென்று, 366

புத்திமிகச் சொன்னவர்க்குப் பொல்லாங்கு பண்ணிவைத்தோம்
பத்தியுள்ள பேரைப் பழித்தோமே—நித்தநித்தம், 367

வாய்மதங்கள் பேசி வல்லவனை யும்பகைத்தோம்
பேய்நரகிற் போகும் பிசகரிந்தோம்—ஞாயமது, 368

என்றழுது தியோ ரெரிநரகிற் போனபின்பு
தொண்டரையே பார்த்துரைப்பார் தூயபரன்—குன்ளுத 369

என்மறையைத் தானுணர்ந்து வென்பேரி லன்புவைத்துக்
கன்மமாம் பொல்லாக் கசடொத்து—நன்மை 370

அறநெறியைக் கைக்கொண்டி ரல்லும் பகலும்
மறவாம லுன்னி வணங்கி—துறவீர், 371

உலகவாழ்வை வெறுத்தும் ஊணிழந்தும் பின்னும்
பலவிதமாய்க் காயம் பதைத்தீர்—நலமடைய, 372

என்னைத் தொடர்ந்ததனு லென்போ லுலகினிலே
பல்லறும் பாச மகற்றியே—புல்லர்கள் 373

நிந்தனையைத் தாஞெறுத்தீர் நீர்பிறந்த நாடுவிட்டு
வந்துபிற தேசத்தோர் வானெறியி—லுந்துதற்கு, 374

பலநலங்களைச் செய்தீர் பாதகராந் தீயோர்
சிலரால் வதையுண்டு செத்தீர்—நலமான, 375

என்கதியை நம்பியே என்பொருட்டா லும்முயிரை
யன்புடனே தந்தீ ரருளுடையீர்—தென்புடனே, 376

வேதனையி லென்துணையை வேண்டினீர் பேய்மதத்தை
நீதியுடன் வென்று நிலைநின்றீர்—சீதப், 377

பிறையடியா ளென்ருயின் பேரருளை யண்டி
கறையாம் பவத்தின் கடலை—முறையால், 378

கடந்து பெருந்துறையைக் கண்டீரே பூவில்
தொடர்ந்த திருமணத்திற் ரூேன்றி—யடர்ந்த, 379

சிறுவர்களைப் பெற்றுத் தீயவழி யொழித்து
மறுவற்ற நல்ல வழியி—லுறுவதற்கு, 380

நல்லபுத்தி சொல்லிவந்தீர் நாடுபிணியதிலுங்
கொல்லும் பலகொடுமைக் கூறதிலும்—வெல்லும், 381

வகையருள வேணுமென்று மன்றாடி துன்பப்
பகையறுத்தீ ரென்றனுக்காய்ப் பாரிற்—றொகைப்பட்ட, 382

நல்லவறங்கள் செய்தீர் நாடிவரும் பஞ்சைகட்கும்
புல்லும் பிணியாளர் போதகற்கும்—நல்ல, 383

வரிசை மிகச்செய்தீர் வானிறைவ னென்னைத்
தரிசித்தீர் பேய்க்கடிந்தீர் தானம்—புரிந்தீர், 384

பத்துக் கற்பனைப்படியே பாருலகிலே நடந்து
சத்தியத்தை நீங்காத் தவமுடித்தீர்—நித்தநித்தம் 385

நாடித் திருச்சபையின் நல்லொழுக்கந் தப்பாமல்
வீடிழந்த பேர்களுக்கு வீடளித்தீர்—வாடி, 386

உடையின்றி வந்தோர்க் குடையளித்தீர் தாயை
பிடையிழந்த பாலரை யீடேற்றிப்—படியில், 387

பிணியாளர் தம்மைப் பிரியமொடு கண்டீர்
தனிச்சிறை வைத்தோரைத் தரிசித்—தினிய, 388

கதிக்காகப் பாரின் கனசெல்வ மூரும்
பதியுமிழந்து பரமநிதி—வேண்டி, 389

பித்தர்போலே திரிந்து பேருலகிலே நிந்தை
யத்தனையுமே பொருத்தீ ரார்மறையால்—புத்தியுற்றீர், 390

ஆகையினா லென்றந்தை யன்புடையீ ருங்களுக்கு
வாழ்க்கையுடன் கொடுக்கும் வாழ்வதனில்—தாகமுடன் 391

வாழ்க வருவீரென் மக்களே யென்றுரைத்துத்
தாழ்வில்லாத் தன்கையாற் றானணைத்து—யாமுடனே, 392

இயல்பலவு மேயியம்பி யெண்ணெண்ணா தூதர்,
செயல்பெறவே நல்லவரைச் சேர்ந்து—நயமாக, 393

முன்வருவார் கோடி முகமனுரைத் தேயவர்க்குப்
பின்வருவார் கோடி பிரியமுடன்—நன்மலர்கள், 394

தூவிடுவா ராயிருந் தூயமணி நீர்சொரிந்து
மேவிடுவா ராயிருந் மேன்மையாய்த்—தாவியே, 395

இந்த விதமா யெழிலிமையோர் தாம்பரவ
அந்தமுள்ள மோட்ச மதிலவரை யெந்தைபரன், 396

கொண்டுவிடு வாரங்கு கோடி கதிரவன்போல்
மண்டுகெதிர் வீசு மகுடமது கொண்டு, 397

கவிப்பா ரவர்சிரசில் காதலுட னேயாசீர்
புவியிலில்லா நல்வரமும் புரிவார்—தவியாமல், 398

மானமுற்று மாசின்றி மாயக்கதியி
லீனமின்றி வாழ்வீ ரினிமையாய்த்—தேன்மலரார் 399

புவிவாழி போற்றும் புகழ்வாழி வித்வர்
கவிவாழி மிக்க—கனிந்து, 400

முற்றிற்று.

விழுப்புரம் ஹநுமான் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

# விளம்பரம்

கோவில்களிலும், பள்ளிக்கூடங்களிலும், வீடுகளிலும் வைக்கக்கூடிய கலர் படங்களும், சீர்மை சுரூபங்களும், செப மாலைகளும், உத்தரீயங்களும், அலுமினிய சுரூபங்களும், பாடுபட்ட சிலுவைகளும், செப புஸ்தகங்களும், அம்மானைகளும் பலவும் கிடைக்கும். விபரம் வேண்டுமானல் கேட்லாக் இனமாக அனுப்பப் படும்.

**M. தம்புசாமி பிள்ளை அண்டு சன்ஸ்**
**வேத சாமான்கள் வியாபாரம்**
தபால் பெட்டி நெ. 10
விழுப்புரம்